**சுருக்கம்**

அறிவிப்புகள் - 2021 - 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் - சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரித், ரம்ஜான், கிறிஸ்துமஸ்) சிறப்பு உணவு வழங்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த் துறை**

**அரசாணை (நிலை) எண்.52** **நாள் 01.11.2021**

**பிலவ, ஐப்பசி 15**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டது:**

சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித ண்.பி4/3034/2021, நாள் 24.09.2021.

**ஆணை:**

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் "விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. சிறுபான்மையினர் விடுதி மாணவ, மாணவியருக்கு சிறுபான்மையினர் பண்டிகைகளுக்கு (புத்த பூர்ணிமா, மஹாவீர் ஜெயந்தி, பக்ரித், ரம்ஜான், கிறிஸ்துமஸ்) சிறப்பு உணவு வழங்கப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, பெறப்பட்ட சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியருக்கு ஒவ்வொரு ஆண்டும் பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப்பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய 5 பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். மேலும், இனிவரும் காலங்களில் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ/மாணவியருக்கு குடியரசு தினம்,

தமிழ் வருடப்பிறப்பு, சுதந்திர தினம் ஆகிய பொது பண்டிகைகளுடன் சிறுபான்மையினர் பண்டிகைகளான ரம்ஜான், கிறிஸ்துமஸ், பக்ரித், மஹாவீர் ஜெயந்தி, புத்த பூர்ணிமா ஆகிய 5 பண்டிகை நாட்களில் ஏதேனும் இரண்டு பண்டிகை நாட்களில், விடுதியில் உள்ள மாணவ / மாணவியரின் எண்ணிக்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர்/ காப்பாளினிகளே முடிவு எடுத்து சிறப்பு உணவு வழங்கிட உரிய ஆணை பிறப்பிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதுடன் இதனால் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதும் ஏற்படாது எனவும் தெரிவித்துள்ளார்.

3. இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, அதனை ஏற்று, இத்துறையின் மூலம் இயங்கும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு குடியரசு தினம், தமிழ் வருடப்பிறப்பு, சுதந்திர தினம் ஆகிய மூன்று பொதுவான பண்டிகைகளுடன் ரம்ஜான், கிறிஸ்துமஸ், பக்ரித், மஹாவீர் ஜெயந்தி, புத்த பூர்ணிமா ஆகிய 5 சிறுபான்மையினர் பண்டிகை நாட்களில் ஏதேனும் இரண்டு பண்டிகை நாட்களில், விடுதியில் உள்ள மாணவ / மாணவியரின் எண்ணிக்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட விடுதி காப்பாளர் / காப்பாளினிகளே முடிவு எடுத்து கூடுதல் நிதிச் சுமை இன்றி பண்டிகை கால சிறப்பு உணவு வழங்க அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை – 5.
மாநில கணக்காயர், சென்னை-18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 1), சென்னை-18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 2), சென்னை-18. (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

**<u>நகல்</u>:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை- 9.
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை- 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை- 5.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை-9.
நிதி (பி.மி.பி மற்றும் சிந)த்துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

வா.சுதா
1/11/2021
**பிரிவு அலுவலர்**
1/11/2021